# அற இலக்கியங்கள் பேசும் துறவறமும் புலால் மறுத்தலும்

*முனைவர் மூ. பாலசுப்பிரமணியன்*
இணைப் பேராசிரியர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783245

***ஆய்வுச்சுருக்கம்***

*தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம் சமண, பௌத்த மதங்களின் எழுச்சிக் காலமாக அறியப்படுகிறது. அக்காலத்தில் நிலையாமை கோட்பாடு பெரிதும் வலியுறுத்தப்பட்டது; நிலையாமையை முன்னிறுத்தும் பொருட்டுத் துறவும், கொல்லாமையும் இலக்கியங்களால் பேசப்பட்டன; அறம் என்பது எல்லாவிடங்களிலும் நிலை பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு இல்லறமும் துறவறமும் பகுக்கப்பட்டன. இல்லறமும் துறவறமும் ஒன்றையொன்று சார்ந்து இயங்க வேண்டும் என்றும், மக்கள் புலாலை மறுக்க வேண்டும் என்றும் அற இலக்கியங்கள் பேசியுள்ளமையை இக்கட்டுரை ஆராய்கின்றது.*

***திறவுச் சொற்கள்: களப்பிரர், அற இலக்கியம், அறம், இல்லறம், துறவறம், காஸ்லாமை, புலால் மறுப்பு, நிலையாமை.***

**முன்னுரை**

*சமூகத்தின் இடையறாத செயல்பாட்டிற்கு அச்சமூகம் பின்பற்றும் ஒழுக்க நெறிகளே காரணமாக அமைந்திருக்கின்றன. சமூகம் ஏற்படுத்திக் கொண்ட ஒழுக்க நெறிகள் மீறப்படுகிற போது தனி மனிதன் மட்டுமல்லாது அவன் சார்ந்திருக்கின்ற சமூகமும் பாதிக்கின்றது. இங்ஙனம் மனித வாழ்வின் உண்மைகளையும் ஒழுக்க நெறிகளையும் அனுபவம் மிக்கவர்கள் கண்டுணர்த்தி, அவ்வுண்மைகளைத் தத்துவார்த்த கோட்பாடாகக் கூறியுள்ளனர். அவர்களைச் சமய அடிப்படையிலும், தத்துவங்களின் அடிப்படையிலும் வகைப்படுத்துவர். இவ்வாறான ஒழுக்க நெறிகளை அறக் கோட்பாடுகளாகவும், அவற்றை எடுத்துரைத்தவர்களைத் துறவிகளாகவும் இந்திய சமூகம் அடையாளப்படுத்துகின்றது. பண்டைய காலத்திலேயே தமிழ்ச் சமூகத்தில் அற நெறிகள் பேசப்பட்டாலும், கோட்பாடாக வலியுறுத்தப்பட்ட காலமாகக் களப்பிரர் காலம் அறியப்படுகிறது. அச்சமூகத்தில் அறத்தைப் பேணுவதற்காக மக்கள் தங்கள் வாழ்வை, இல்லறம் என்றும் துறவறம் என்றும் பகுத்துக் கொண்டுள்ளனர். இவ்விரண்டடும் கடமைகள், பண்புகளின் அடிப்படையில் ஒன்றையொன்று சார்ந்தும் இயங்கியுள்ளன. இல்லறத்தாரின் கடமைகளில் ஒன்றாகத் துறவறத்தாரைப் பேணுதல் கருதப்பட்டுள்ளது. துறவறத்தாரும் சமூகத்தில் அற பேணுவதற்கான பணிகளில் ஈடுபட்டனர். அந்தவகையில் கீழ்க்கணக்கு அற இலக்கியங்களின் வழியே, களப்பிரர் கால துறவறம் குறித்தும் துறவறத்தாருக்குரிய பண்புகள் குறித்தும் இக்கட்டுரை ஆராய்கின்றது.*

**அறமும் அற இலக்கியங்களும்**

*இந்தியப் பண்பாடு என்பதே அறநெறி சார்ந்தது என்பர் விவேகானந்தர் தனியாக அறத்தைக் காணாமல், வாழ்வின் பகுதியாகவோ அல்லது வாழ்வாகவோ தமிழர்கள் கருதுகின்றனர். அறத்தைப் புறவொழுக்கமாகக் கொண்டு அகத்திலும் கடைப்பிடித்துள்ளனர். இவ்வுண்மையைத் தமிழில் காலந்தோறும் தோன்றிய இலக்கியங்களின் வழி அறியலாம். குறிப்பாகச் சங்க மருவிய*

காலத்தில் தோன்றிய அற இலக்கியங்கள் சமூகத்தில் ஒவ்வொரு நிலையிலும் அறம் பேணப்பட வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்தியுள்ளன. அவ்விலக்கியங்கள் அறம் என்பதற்கும் விளக்கம் தந்துள்ளன. மனித இனத்தின் நன்மைக்காக, இன்பத்தின் உறைவிடமாக உருவாக்கப்பட்டதே 'அறம்' எனப்படுகிறது. அறம் என்பது பொதுவாக நற்பண்பு அல்லது ஒழுக்கம் என்னும் பொருளிலேயே வழங்கப்படுகிறது. சொல்லும் செயலும் பண்பட்ட நிலையில் நற்சிந்தனை மேலோங்க வாழ்வது அறம் என அற இலக்கியங்கள் பகன்றுள்ளன. வள்ளுவரும்,

**சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு** (குறள்., 31)
**அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்**
**புறத்த புகழும் இல** (குறள்., 39)

என அறத்தின் முக்கியத்துவத்தைத் தனி அதிகாரம் வகுத்துக் கூறியதோடு, வாழ்வில் அனைத்து நிலைகளிலும் அறம் கடைபிடிக்கப் படல் வேண்டும் என்ற செய்தியை நூல் முழுமையும் பேசியுள்ளார். மேலும், 'தனி மனித ஒழுக்கத்தோடு பிறர் நலம் பேணுதலையும் உள்ளடக்கியதாக அறம் இருக்க வேண்டும்' என்ற நோக்கத்தை மற்ற அற இலக்கியங்களும் பேசியிருக்கின்றன. அவ்விலக்கியங்கள் அறத்திற்குத் துறவறமும் துறவிகளும் எங்ஙனம் பங்காற்றியுள்ளனர் என்றும், அறம் நிலைபெற துறவிகளும் இல்லறத்தாரும் எங்ஙனம் வாழ வேண்டும் என்றும் பேசியுள்ளன.

## துறவு

இல்லறம் என்பதை மனத்து அளவில் துறந்து, பற்று இல்லாமல் வாழ்வதே, 'துறவு' எனப்படும். மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளில் இச்சைக்கு ஏற்ப மனம் அலையாது நிறுத்தற்காக மேற்கொள்ளும் செயல் துறவு அல்லது தவமெனப்படும். 'அகம் விளங்கும் உள் ஒளியின் இடத்து உறவு கொண்டு வாழ்ந்து, அதன் பயனாக அழிவற்ற நிலையான இன்ப வாழ்வைப் பெறுதல்' என்பார் வள்ளலார். பரிமேலழகரும் யாதாயினும் ஒரு தொடர்ப்பாடு உளதாயினும் அதனைப் பற்றறத் துறத்தல் துறவு என்கிறார். மணக்குடவரோ, மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்ற மூன்றை விடுதல் என வேறுவகையில் கூறுகிறார். இல்லறம் தவிர்த்தல் அல்லது இல்லறத்தைத் துறத்தல் 'துறவு' என அற இலக்கியங்கள் விளக்குவதை இவற்றால் அறியலாம். அந்தவகையில் 'துறவு' என்பது இல்லறத்தை மட்டுமல்லாது உலகியல் வாழ்வைத் துறத்தல் என்ற கருத்து விளக்கம் பெறுகிறது. மேலும், துறவறத்தை முழுமையாக மேற்கொள்ளலாமல் இல்லறத்திலிருந்தும் துறவறத்தைப் பேணலாம் என்ற கருத்தையும் சில அற இலக்கியங்கள் பேசியுள்ளன என்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

## துறவி

துறவு வாழ்க்கையை மேற்கொள்பவர் 'துறவி' எனப்படுகிறார். துறவி என்பார் ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கலாம். அவர்கள் 'துறவி' என்ற பொதுப் பெயரில் குறிக்கப் பெற்றுள்ளனர்.

துறவறம், மனித வாழ்வில் நான்காம் ஆசிரம நிலையாகும். பந்த பாசங்களினின்று விடுபட்டுத் தன்னை வருத்தி துறவு மேற்கொள்ளுதல். இக்காலத்தில் இடம் விட்டு இடம் சென்று, உடல் சுகத்தைத் துறந்து கடவுளைத் தியானிப்பதும், தான் அறிந்த உண்மைகளையும் நீதிகளையும் மக்களுக்குக் கூறுதலும் ஆகும். சமய வாழ்வில் மக்களை ஈடுபடச் செய்தல். முற்றும் துறந்த நிலையே சந்நியாசமாகும். (https://ta.wikspedia)org/wiki/சந்நியாசம்)

துறவிகள் சமயம் சார்ந்த நிலையில் பல பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சமயம் சாரத நிலையிலும் இருந்துள்ளனர். குறிப்பாகத் தமிழ் மரபில் காணப்படும் சித்தர்கள் சமயச் சார்ப்பற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். பிற்காலத்தில் அவர்களைக் குறிப்பிட்ட

*சமயத்தவராகப் பார்க்கும் மரபு ஏற்பட்டு விட்டது. சமணம், பௌத்தம் சமயங்கள் நிலையாமைத் தத்துவத்தை மிகவும் வலியுறுத்தியமையால் துறவு பற்றியும், அவர்களுக்கான வரையறைகள் குறித்தும் அற இலக்கியங்கள் விவரித்துள்ளன. அச்சமயங்களில் பெண் துறவும் இருந்துள்ளதை க.ப.அறவாணன் சுட்டுகின்றார். (அறவாணன், க.ப., அற இலக்கியகளஞ்சியம், ப. 34) சைவம், வைணம், கிறித்துவம் போன்ற சமயங்களும் துறவிகளைப் பற்றிப் பேசியுள்ளன. இசுலாம் சமயத்தில் அனுமதியில்லை என்பது இங்கு நினையத்தக்கது.*

**துறவிகளுக்கான வரையறை**

*துறவு பற்றியும் துறவியர்களுக்கான வரையறைகள் குறித்தும் அற இலக்கியங்கள் நிரம்ப பேசியுள்ளன. அவைதுறவியர்களுக்கான தோற்றம், பண்புகள், குணங்கள், கடமைகள், அவர்களின் நோக்கம் என்பனவற்றை விரிவாகப் பதிவுசெய்துள்ளன. சமயம் சார்ந்மும், சாராத நிலையிலும் அக்கருத்துக்கள் அமைந்துள்ளமையைக் காண முடிகின்றது. ஏலாதி,*

***விளையாமை, உண்ணாமை, ஆடாமை, ஆற்ற***
***உளையாமை உட்குடைத்தா வேறல், களையாமை***
***நூல் பட்டு ஆர் பூங்கோதாய், நோக்கின் இசை ஆறும்***
***பாற்பட்டார் கொண்டு ஒழுகும் பண்பு***

***(ஏலாதி, பா. 13)***

*என்னும் இப்பாடலில் துறவியர் ஆறு பண்புகளைப் பெற்றிருப்பர் என்கிறது. சிறுபஞ்சமூலம் அவர்களின் கடமைகளை,*

***பக்கம் படாமை, ஒருவற்குப் பாடு ஆற்றல்***
***தக்கம் படாமை, தவம், அல்லாத் தக்கார்***
***இழிசினர்க்கேயானும் பசித்தார்க்கு ஊண் ஈத்தல்***
***கழி சினம் காத்தல், கடன்***

***(சிறுபஞ்சமூலம், பா.75)***

*என விரிந்துரைக்கிறது. இங்ஙனம் துறவிகளின் ஒவ்வொரு செயலையும் ஆழமாக விவாதித்துள்ள அற இலக்கியங்கள், அவர்கள் சமூகத்திற்குப் பயன்படுமாறு, நிலையாமை தத்துவத்தை எடுத்துரைக்க வேண்டும் என்கின்றன. ஆகையால் தான் வள்ளுவர் துறவிகளைப் பற்றி,*

***மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்***
***பழித்தது ஒழித்து விடின்.***

***(குறள்., 280)***

*என மிக எளிமையாக விளக்கமளித்துள்ளார்.*

**துறவிகளுக்கான உணவு**

*துறவியர் இல்லறத்தில் உள்ளோர் தரும் உணவுகளை ஏற்க வேண்டும். அவ்வுணவைப் பாத்திரங்களின்றி கைகளால் ஏந்தி, வாயால் உண்ண வேண்டும் என அற நூல்கள் கூறியுள்ளன. மேலும், மரக்கறிகளைத் தவிர, புலால் உணவினை ஏற்றல் கூடாது. துறவிகள் மட்டுமல்லாது மக்களும் புலாலை மறுத்தல் வேண்டும் என்றே அவ்விலக்கியங்கள் வலியுறுத்தியுள்ளன. எல்லா உயிர்களிடத்தும் அன்போடு இருக்கக் கூடிய இயல்பை மக்கள் பெற்றிருக்க வேண்டும்; புலால் உண்டால் உயிர்க் கொலைகள் நடக்கும்; ஆகையால், கொல்லாமை என்பதை அறமாகப் போற்ற வேண்டும் என்கிற நிலையில் புலால் மறுப்பை அற இலக்கியங்கள் பேசியுள்ளன. வள்ளுவர்,*

***கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி***
***எல்லா உயிரும் தொழும்***

***(குறள்., 260)***

*என்று உணர்த்துகின்றார். மேலும், ஆயிரம் வேள்விகளைச் செய்வதைவிட ஒரு உயிரைக் கொல்லாமல் இருத்தல் சிறந்தது என்று,*

***அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்***
***உயிர்செகுத்து உண்ணாமை நன்று***

***(குறள்., 259)***

*என்னும் குறட்பாவில் உரைக்கின்றார். நாலடியாரும் வள்ளுவர் வழியில் புலால் மறுப்பைப் பேசுகின்றார். துறவறத்திலிருப்பவர் மட்டுமல்லாது இல்லறத்தாரும் புலால் உணாவைக் கைவிட வேண்டும் என்கிறார். இதனை,*

***அக்கேபோல் அங்கை யொழிய விரலழுகித்***
***துக்கத் தொழுநோய் எழுபவே - அக்கால்***
***அலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற***
***பழவினை வந்தடைந்தக் கால்***

***(நாலடியார், பா. 123)***

*என்ற பாடலின் வழி உணர்த்துகின்றார். ஓர் உயிரினை வதைத்து அதன் இறைச்சியை உண்ணுகிறவன் எந்தவொரு அறத்தையும்*

*உறுதியாகக் கடைப்பிடிக்க மாட்டான் என்பதைத் திரிகடுகம் உரைக்கின்றது. அதனை,*

***கொலைநின்று தின்றொழுகு வானும்***

***(திரிகடுகம், பா. 74)***

*என்னும் வரி உணர்த்துகின்றது. அறத்தைக் கடைப்பிடிப்பவர்கள் எந்தவொரு உயிரையும் கொல்ல மாட்டார்கள் என்றும் கூறியிருக்கின்றது.*

## புலால் உண்ணுதல் துன்பத்தைத் தரும்

*துன்பங்கள் பல வழிகளில் வருமென்றாலும் புலால் உண்பதும் துன்பத்தைத் தரும் என்ற கருத்து அற இலக்கியவாதிகளிடம் இருந்துள்ளது. கொலை செய்தலும், புலால் உண்ணலும் துன்பத்தைத் தரும் என்பதைக் காரியாசான்,*

***கோறலும் நஞ்சூனைத் துய்த்தல் கொடுநஞ்சு***

***(சிறுபஞ்சமூலம், பா. 11)***

*எனச் சிறுபஞ்சமூலம் பாடல் வழி உணர்த்துகின்றார். இந்தக் கொடிய செயலைச் செய்கின்றவர்களுக்கு நஞ்சு போல் துன்பம் வரும் என்பதை எடுத்துரைக்கின்றார்.*

## புலால் மறுத்தால் விண்ணுலகத்தில் போற்றப்படுவர்

*பிறர் புரியும் கொலைத் தொழிலை விரும்பாதவன், எந்தவோர் உயிரையும் கொல்லாதவன், புலாலை உண்ணாதவன் விண்ணுலகத்தில் உள்ளவர்களால் போற்றப்படுவான் என்கிறார் கணிமேதாவியார். அதனை,*

***கொலைபுரியான் கொல்லான் புலால்மயங்கான்***

***(ஏலாதி, பா. 2)***

*எனும் ஏலாதிப் பாடலில் எடுத்தியம்புகின்றார். மற்ற உயிர்களுக்குத் தீங்கு செய்யாதவனை அனைவரும் விரும்புவார்கள் என்பதையும் அப்பாடலில் உணர்த்துகின்றார். கொலை செய்தல் குற்றம் என்று விளம்பிநாகனார்,*

***அலைப்பான் பிறவுயிரை யாக்கலுங் குற்றம்***
***விலைப்பாலிற் கொண்டுன் மிசைதலுங் குற்றம்***
***சொலற்பால அல்லாத சொல்லுதலுங் குற்றம்***
***கொலைப்பாலுங் குற்றமே யாம்***

***(நான்மணிகடிகை, பா. 100)***

*என்ற நான்மணிக்கடிகைப் பாடல் மூலம் விளக்குகின்றார்.*

## துறவறமும் கொல்லாமையும்

*கொல்லாமை என்பது ஐயறிவு உடையன முதல் ஓரறிவு உடையன ஈறாய உயிர்களைச் சோர்ந்தும் கொல்லுதலைச் செய்யாமை என்பர் பரிமேலழகர். துறவி தற்காப்பிற்குக் கூடப் பிற உயிரைக் கொல்லக்கூடாது என்பதனால் கொல்லாமை என்னும் அதிகாரம் துறவறவியலில் சொல்லப்பட்டது என்பர். களப்பிரர் காலம் சமண, பௌத்த சமயங்களின் காலமாகும். அக்காலத்தில் துறவறம் மட்டுமல்லாது துறவியர் உட்பட மக்கள் அனைவரும் புலால் உண்ணக் கூடாது. அதோடு கொல்லாமையையும் கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. சமணர் எவ்வுயிரையும் கொல்லக்கூடாது என்றனர். பௌத்தர்கள் மற்றவர்கள் கொன்ற உயிரின் இறைச்சியை உண்ணலாம் என்றனர். ஆனால், திருவள்ளுவர் எக்காரணம் கொண்டும் எவ்வுயிரையும் கொல்லவோ, கொன்றதை உண்ணவோ கூடாது என்கிறார். எனவே, துறவறத்திற்கும் கொல்லாமைக்கும் தொடர்பு இருப்பதை உணர்ந்து அற இலக்கியவாதிகள் கொல்லாமைக் கூடாது என்றனர். அதனால் தான் வள்ளுவர் அறவினை என்பதே கொல்லாமை என்றார். அதனை,*

***அறவினை யாது? எனின், கொல்லாமை, கோறல்***
***பிறவினை எல்லாம் தரும்.***

***(குறள்., 321)***

*என்னும் குறட்பாவால் அறியலாம்.*

*பிற உயிர்களைக் கொல்லாமல் கிடைத்தவற்றை பகிர்ந்துண்ண வேண்டும் என்றும், (குறள்., 322) துறவிகளின் வழி என்பதே கொல்லாமைதான் என்றும், (குறள்., 324) கொல்லாமை என்னும் கொள்கையோடு இருப்பவர்களின் வாழ்நாள் கூடும் என்றும், (குறள்., 326) உயிர்கொலை செய்து யாகம் நடத்தல் கூடாது என்றும் (குறள்., 328) கொல்லாமையைப் பலவாறு வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். சமணம், பௌத்தம், வைதீகம் என்று அனைத்துச் சமயங்களும் கொல்லாமை வேண்டும் என்கின்றன. முன்றுறையரும் கொன்று யாகம் நடத்துவதைத் தீது என்கிறார். அதனை,*

***செறலின் கொலை புரிந்து, சேண் உவப்பர் ஆகி***
***அறிவின் அருள் புரிந்து செல்லார், பிறிதின்***
***உயிர் செகுத்து, ஊன் துய்த்து, ஒழுகுதல் - ஓம்பார்***
***தயிர் சிதைத்து, மற்றொன்று அடல்.***

***(பழமொழிநானூறு, பா. 164)***

என்னும் பாடலால் அறியலாம். கொன்று உண்டால் நாக்குச் செத்துவிடும் என்று சிறுபஞ்சமூலம்,

***கொன்று உண்பான் நாச்சாம், கொடுங்கரி போவான் நாச்சாம்***
***நன்று உணர்வார் முன் கல்லான் நாவும் சாம், ஒன்றானைக்***
***கண்டுழி, நாச்சாம், கடவான் குடிப் பிறந்தான்***
***உண்டுழி, நாச்சாம் உணர்ந்து.***

***(சிறுபஞ்சமூலம், பா. 8)***

என்று குறிப்பிடுகின்றது. துறவிகள் மட்டுமல்லாது அனைவரும் கொல்லாமையைக் கடைபிடிக்க வேண்டும். அவ்வாறு கொன்றாலோ, கொல்வதற்குத் துணைப் போனாலோ அவை பாவச் செயல் என்று சிறுபஞ்சமூலம் பதிவு செய்துள்ளது. (சிறுபஞ்ச., பா. 68) நான்மணிக்கடிகையோ, கொல்லாமையை, கல்லாமை, நாணம் இல்லாமை, கொள்கை போற்றாமை போன்றவற்றோடு ஒப்பிட்டுக் கூறுகின்றது. அதனை,

***எல்லா இடத்தும் கொலை தீது, மக்களைக்***
***கல்லா வளரவிடல் தீது, நல்லார்***
***நலம் தீது, நாண் அற்று நிற்பின், குலம் தீது,***
***கொள்கை அழிந்தக்கடை.***

***(நான்மணிகடிகை, பா. 92)***

என்னும் பாடலால் அறியலாம். இங்ஙனம் கொல்லாமை என்பதைக் களப்பிரர் காலம் சமய வேறுபாடின்றி கூறியுள்ளதை அறிய முடிகின்றது. புலால் உண்ணாமையை வலியுறுத்தியுள்ள ஒவ்வொரு இலக்கியமும் புலால் உண்பதால்தான் உயிர்க் கொலை நடைபெறுகிறது. ஆகையால், கொல்லாமையை அவ்விலக்கியங்கள் முன்மொழிந்துள்ளன.

**முடிவுரை**

சங்க மருவிய காலம் சமண பௌத்த சமயங்களின் எழுச்சி காலமாக அறியப்படுகிறது. அக்காலத்தில் நிலையாமை வலியுறுத்தப்பட்டமையால் துறவு போற்றப்பட்டுள்ளது. மக்கள் அனைவரும் பற்றற்றுத் துறவு வாழ்க்கையைப் பேண வேண்டும் என்றும், இல்லையேல் இல்லறத்திலிருந்து துறவறத்திற்கு உதவ வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளன. துறவறம் குறித்து அற இலக்கியங்கள் பெரும்பாலும் ஒத்த கருத்தையே கொண்டுள்ளன. துறவிகளுக்கான தகுதிகளும், குணங்களும், கடமைகளும் அற இலக்கியங்களால் பேசப்பட்டுள்ளன. துறவத்தார் இல்லறத்தாரிடம் உணவை ஏற்று உண்ண வேண்டும் என்றும், புலால் மறுத்தலையும், கொல்லாமையையும் அவர்கள் முதன்மையாகக் கொண்டு வாழ வேண்டும் என்றும் அவ்விலக்கியங்கள் கூறியிருக்கின்றன. துறவறத்தோடு புலால் மறுத்தலை வலியுறுத்த கொல்லாமையை முன்னிறுத்தப்பட்டுள்ளது. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும், கொல்லாமை என்பது எப்பொழுதும் கூடாது என்பதைத் துறவறத்தின் வரையறைகளின் வழியும், துறவிகளின் வழியும் பேசப்பட்டிருக்கின்றன.

**துணைநூற்பட்டியல்**


1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், (ச.வே.சு., உரை) மெய்ப்பன் பதிப்பகம், சென்னை. 2006.
2. அறவாணன், க.ப., அற இலக்கிய களஞ்சியம், தமிழ்க் கோட்டம், சென்னை. 2008.
3. திருக்குறள், (பரி மணக்குடவர் உரைகள்) கழக வெளியீடு, சென்னை. 1951.
4. கவிதாமணி, அ., அறமும் அறச்சிந்தனைகளும், மீஇஆஏ, சென்னை. 2013.
5. புலவர் குழந்தை, நீதிக்களஞ்சியம், சாரதா பதிப்பகம், சென்னை. 2009.
6. சுப்புரெட்டியார், ந., தமிழ் இலக்கியங்களில் அறம்-நீதி-முறைமை, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை. 1988.
7. மாதவன், சு., தமிழ் அற இலக்கியங்களில் பௌத்த சமண அறம், செம்மொழி பதிப்பகம், சென்னை. 2008.
8. https://ta.wikspedia)org/wiki/சந்நியாசம்.